# ஸ்காபறோவில் பச்சைக் கொள்கலத் திட்டம்

*இதழ் 1—ஏப்பிறில் 2003*

**இதோ…பச்சைக் கொள்கலத் திட்டம்**

யூன் 24ம் திகதி தொடங்கும் கிழமையிலிருந்து ஸ்காபறோவில் புதிய முறையில் கழிவு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அது பச்சைக் கொள்கலத் திட்டம் எனப்படும்.

பச்சைக் கொள்கலத் திட்டத்தின்படி உங்கள் உணவுக் கழிவு, கழித்த உணவுச் சரைகள் போன்ற உங்கள் சேதனக் கழிவுகள் அகற்றப்படும் - [விபரங்களுக்கு "பச்சைக் கொள் கலத்தில் எவற்றை இடலாம் (இடக்கூடாது)" என்ற சிற்றேட்டைப் பார்க்கவும்] - ரொறன்ரோ விலிருந்து நிரவல் புலத்துக்கு அனுப்பப்படும் வீட்டுக் கழிவுகளின் தொகையைக் குறைப்பதற்கு இது உதவும்.

**பச்சைக் கொள்கலத் திட்டத்தில் அப்படி என்ன சிறப்பு?**

இரண்டு விடயங்கள். ஒன்று, எங்கள் குப்பையைக் கைதீர்ப்பதற்கு நிரவல் புலத்தை நாடுவதற்குச் செலவு பிடிக்கும். இரண்டு, சேதனக் கழிவை மீண்டும் பயன்படுத்துவது சுற்றாடலுக்கு நல்லது.

இந்த மாநகரத்தின் கீல் பள்ளத்தாக்கு நிரவல் புலம் 2002ல் மூடப்பட்டது. தற்பொழுது எங்கள் கழிவு முழுவதும் மிச்சிகனுக்கு ஏற்றி அனுப்பப்படுகிறது. அதனால் கழிவு கைதீர்க்கும் செலவு ஒரு தொன்னுக்கு $12 என்ற நிலையிலிருந்து $52 ஆக அதிகரித் துள்ளது. அது 300% க்கும் மேற்பட்ட அதிகரிப்பாகும்! நிரவல் புலத்துக்குச் செல்லும் குப்பையுள் ஏறத்தாழ 30% சேதனக் கழிவே. பச்சைக் கொள்கலத் திட்டத்தின்படி நிரவல் புலத்துக்குச் செல்லும் சேதனக் கழிவு கலப்புரமாகப் பயன் படுத்தப்படும்.

2002 செப்டெம்பர் முதல் எற்றோபிக்கோ வாசிகளுள் 95%க்கு மேற்பட்டோர் பச்சைக் கொள்கலத் திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார்கள்.

**நான் என்ன செய்ய வேண்டும்?**

பச்சைக் கொள்கலத் திட்டத்தைப் பின்பற்றுவது எளிது. உணவுக் கழிவு, கழித்த உணவுச் சரைகள் போன்ற உங்கள் வீட்டுச் சேதனக் கழிவை ("மணக்கும் கழிவை") வெளியே இட்டு வைக்கவும். அது கிழமைக்கு ஒரு தடவை மாநகரத்தால் அகற்றப்பட்டு, பதப்படுத்தும் களம் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தோட்டங்களுக்கும் தோப்புகளுக்கும் வேண்டிய கலப்புரமாக மாற்றப்படும்.

**பச்சைக் கொள்கலத் திட்டத்துக்கு உட்படும் தகுதி எனக்கு இருக்கிறதா?**

நீங்கள் உங்கள் வீதியோரத்தில் இட்டு வைக்கும் வீட்டுக் கழிவை மாநகரமே அகற்றி வருகிறது என்றால், ஆம்—நீங்கள் பச்சைக் கொள்கலத் திட்டத்துக்கு உட்பட்டவர்களே. (உங்கள் குப்பை ஒரு பொது மையத்தில் வைத்து அல்லது தனிப்பட அகற்றப்படுகிறது என்றால்,—எடுத்துக்காட்டாக நீங்கள் மாடியகங்களில், சில தொடர் வீடுகளில் வசிப்பவர்கள் என்றால்—இந்தக் கட்டத்தில் இத்திட்டத்துக்கு உட்படமாட்டீர்கள்).

**எனது வீட்டுக் குப்பை, மீள்பாவனைப் பொருள் வகைகள் அகற்றப்படும் நேரகால அட்டவணை மாறுமா?**

உங்கள் குப்பை அகற்றப்படும் நாள் மாறக்கூடும். மேற்படி திட்டம் யூன் 24ம் திகதியிலிருந்து தொடங்கும் கிழமையில் ஆரம்பிக்க முன்னர் உங்கள் புதிய அட்டவணையை நாங்கள் உங்கள் வீட்டில் ஒப்படைப்போம். அதைப் பார்த்து உங்கள் கழிவு அகற்றப்படும் நாள் மாறியுள்ளதா இல்லையா என்பதை அறிந்து கொள்ளவும்.

1. உங்கள் பச்சைக் கொள்கல சேதனக் கழிவு (மணக்கும் கழிவு) கிழமைக்கு ஒரு தடவை அகற்றப்படும்.
2. உங்கள் குப்பை (மணக்காத கழிவு) *இரண்டு கிழமைகளுக்கு ஒரு தடவை* அகற்றப்படும்.
3. உங்கள் மீள்பாவனைப் பொருள் வகைகள் தொடர்ந்தும் இரண்டாவது கிழமையில் அகற்றப்படும்.
4. உங்கள் வளவுக் கழிவு தொடர்ந்தும் ஏப்பிறில், மே, அக்டோபர், நவம்பர் மாதங்களில் கிழமைக்கு ஒரு தடவையும், யூன், யூலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் இரண்டு கிழமைகளுக்கு ஒரு தடவையும் அகற்றப்படும்.

ஒரு முக்கியமான விடயத்தை நீங்கள் உள்ளத்தில் பதிப்பது முக்கியம். இன்று ‘‘குப்பை’’ என்று நீங்கள் நினைப்பது பச்சைக் கொள்கல சேதனக் கழிவுத் திட்டம் தொடங்கிய பிற்பாடு குப்பை ஆகாது. உங்கள் (உணவுக் கழிவு, அழுக்கு துடைப்புத் தாள், இறைச்சி, மீன், பூனை மலம், பிராணிகளின் கழிவு, கழிவுக் கச்சு முதலிய) சேதனக் கழிவுகள் அனைத்தும் வாராந்தம் உங்கள் பச்சைக் கொள்கலத்திலிருந்து அகற்றப்படும்.

மீளப் பாவிக்க முடியாத, இரண்டு கிழமைகளுக்குச் சேர்த்து வைக்கத்தக்க பிளாஸ்திக் பொதியுறைகள், கலங்கள், உடைந்த பொம்மைகள், பாத்திரங்கள், மின் குமிழ்கள், ஓட்டத்துக்குப் பாவித்து உருக்குலைந்த சப்பாத்துகள் போன்றவையே, அதாவது இரண்டு கிழமைகளுக்குச் சேர்த்து வைக்கத்தக்க காய்ந்த, மணக்காத, பொருட்களே உங்கள் குப்பையில் எஞ்சியிருக்கும்.

### பச்சைக் கொள்கலத் திட்டம் எவ்வாறு செயற்படுகிறது?

ரொறன்ரோ மாநகரம் உங்களுக்கு இரண்டு கொள்கலங்களை வழங்கும் – பெரிது சில்லுகள் கொண்டது. அதனைத் தெருவோரத்தில் வைத்து எடுக்கலாம். சிறியதைச் சமையலறைக்குள் தண்ணீர் ஏந்தியின்கீழ் அல்லது உங்களுக்கு வசதியான ஓரிடத்தில் வைக்கலாம். நீங்கள் விரும்பினால் உங்கள் வழமையான குப்பைக் கொள்கலனைப் போலவே இவ்விரு கொள்கலங்களுக்கும் பிளாஸ்திக்குப் பைகளைப் (கொள்வனவுப் பைகளை) பாவிக்கலாம். மே அல்லது யூன் மாதத்தில் இவை உங்களுக்குக் கிடைக்கும்.

### பச்சைக் கொள்கலத்தினுள் இடக்கூடியவை - இடக்கூடாதவை

பச்சைக் கொள்கலத்தினுள் இடக்கூடியவை…

- பழவகை, மரக்கறிக் கழிவுகள்
- இறைச்சி, சிப்பி, மீன் வகைகள்
- பஸ்டா, பாண், தானிய உணவு வகைகள்
- முட்டைக் கோது, பாலுணவு வகைகள்
- காப்பிக் கட்டை, வடி, தேயிலைச் சரைகள்
- அழுக்கு துடைப்புத் தாள், ஒற்றுத் தாள் வகைகள்
- அழுக்கடைந்த உணவுச் சரைகள் – உடன் உணவு பொதிவுத் தாள், ஐஸ்கிறீம் பெட்டி, மவின் தாள், மா – சீனி பை வகைகள்
- கடதாசியாலான காப்பிக் குவளை, கோப்பை வகைகள்
- இனிப்பு, விசுக்கோத்து, கேக்கு வகைகள்
- மூலிகை, நறுமணச் சரக்கு, வேகும் பண்டத்தில் சேரும் கூறுகள்
- மண்ணுடன் கூடிய வீட்டுத் தாவரங்கள்
- கழிவுக் கச்சு, உடல்தூய்மை பேணும் பொருட்கள்

- பிராணிகளின் கழிவு, படுக்கை (எடுத்துக்காட்டாக பறவை/சிறு பிராணிக் கூட்டுக் கழிவு), பூனை மலம்
- பிராணிகளின் உணவு வகைகள்

**தயவுசெய்து பின்வருவனவற்றை இடவேண்டாம்...**

(இவை உருக்குலைய மாட்டா. ஆதலால் இவற்றைக் கலப்புரமாக மாற்ற முடியாது).

- பிளாஸ்திக்காலான பொதி உறை, பை, சாண்ட்விச் பை வகைகள்
- பிளாஸ்திக்காலான உணவு கொள்கலங்கள் (எ-கா: தயிர் அல்லது மாஜறின் கொள்கலங்கள்), கத்தி-முள்ளுக் கரண்டி வகைகள்
- பிளாஸ்திக்காலான பால் பை வகைகள்
- ஸ்டைறோபோம், இறைச்சித் தட்டுக்குப் பதிக்கும் உறை வகைகள்
- உலோகச் சருகு வகைகள்
- செயற்கைப் பூக்கள்
- தோல், துணி, உடுப்பு வகைகள்
- கம்பளி, விரிப்பு வகைகள்
- சிகரெட்டு அடிக்கட்டை, புகையிலை வகைகள்
- தக்கைகள் (வைன் போத்தில் தக்கைகள் முதலியவை)
- சுவிங்கம்
- காது சுத்தப்படுத்தும் பொருள், பஞ்சுச் சுருள், ஒப்பனைப் பொருள் அகற்றல் தட்டு வகைகள்
- குழந்தைகளைத் துடைக்கும் துணி வகைகள்
- ஓற்றி எறியும் துணி வகைகள்
- உலர்த்தி தூசு, தகடு வகைகள்
- உறிஞ்சி- பை, கழிவு வகைகள்
- இறகுகள்
- முடி, பிராணிகளின் உரோமம்
- கணப்புச் சாம்பர், இறைச்சி வாட்டும் வாயு அடுப்பு (BBQ) சாம்பர்
- மரச் சாமான், சப்பை வகைகள்

**உங்கள் சேதனக் கழிவுக்கு என்ன நடக்கிறது?**

வீதியோரத்தில் இட்டு வைக்கப்படும் உங்கள் பச்சைக் கொள்கலக் கழிவு வாகனங்களில் ஏற்றப்பட்டு, அதன் இரண்டு கூறுகளுள் ஒன்றில் இடப்பட்டு, டவ்றின் சேதனக் கழிவு பதப்படத்தல் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்படும். பணியாளர்கள் சேதனக் கழிவைப் பார்வையிட்டு, தேவைப்படாத – பெரிய கூறுகளை அகற்றுவார்கள். சேதனக் கழிவு “anaerobic digestion” மூலம் திண்மப்படுத்தப்பட்டு சுத்தமான, வளமான கலப்புரமாக மாற்றப்படும்.

*Anaerobic digestion என்பது உயிர்வளி அற்ற நிலையில் பெருகும் நுண்ணுயிர்கள் மூலம் திண்மங்களை உருக்குலைக்கும் படிமுறை ஆகும்.*

**பொய்த் தோற்றம்!**

பச்சைக் கொள்கலத் திட்டம் செயற்படத் தொடங்கிய பின்னர் நீங்கள் யன்னல் வழியாக் பார்க்கும்பொழுது குப்பை அகற்றுவோர் உங்கள் குப்பையையும் பச்சைக் கொள்கலக் கழிவையும் தமது வாகனத்தின் பிற்பகுதியில் ஒரே கூறில் இடுவது போல் தெரியும். கவலைப்பட வேண்டாம். அந்த வாகனத்தில் இரண்டு கூறுகள் உள்ளன—அவற்றுள் ஒன்று பச்சைக் கொள்கலக் கழிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொடர்ந்து செய்யவும்! கலப்புரமாக்கவும்!**
நீங்கள் உங்கள் பின்வளவில் வைத்து ஒரு கலப்புரமாக்கியைப் பயன்படுத்துகிறீர்கள் என்றால், அதனைத தொடர்ந்து செய்யவும். பச்சைக் கொள்கலத் திட்டத்தின் சிறப்பு என்னவென்றால், நீங்கள் வளவில் வைத்துக் கலப்புரமாக்க முடியாத பிராணிகளின் கழிவு, இறைச்சி, மீன் வகைகள், கழிவுக் கச்சுகள் போன்றவற்றை அது ஏற்றுக்கொள்ளும்.

**மாணவர்கள் உங்கள் வாயிலுக்கு வருவார்கள், எதிர்பார்த்திருக்கவும்.**
இளவேனில் காலம் முழுவதும் ஸ்காபறோவில் வீட்டுக்கு வீடு சென்று பச்சைக் கொள்கலத் திட்டத்தை மக்களுக்கு விதந்துரைப்பதற்கு ரொறன்ரோ மாநகரம் மாணவர்களை அமர்த்தியுள்ளது. அவர்களுள் எவராவது ஏற்கெனவே உங்கள் வீட்டுக் கதவில் தட்டியிருக்கக்கூடும். (அவர்கள் பெப்ரவரி மாதம் இயங்கத் தொடங்கிவிட்டார்கள்).

இத்திட்டம் குறித்து நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு மாணவர்கள் மறுமொழி கூறுவார்கள். அவர்களிடம் அனைத்தையும் கேட்டறியவும்! பச்சைக் கொள்கலத் திட்டம் சுமுகமாக இயங்குவதற்குத் தகவல் பரிமாற்றமும் புரிந்துணர்வும் உதவும்.

அவர்கள் உங்களைச் சந்திக்காவிட்டால் கவலைப்பட வேண்டாம்: அடுத்த சில மாதங்களில் உங்களுக்கு ஏராளமான விபரங்கள் கிடைக்கும்.

**ஏதாவது கேள்விகள் உண்டா? மேலதிக விபரம் தேவையா?**
பச்சைக் கொள்கலத் திட்டம் குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், ரொறன்ரோ மாநகர வாடிக்கையாளர் சேவையுடன் தொடர்புகொள்ளவும்: 416-338-2010, அல்லது எமது இணையத் தளத்தை நாடவும்: www.toronto.ca/greenbin.

Going Green in Scarborough Issue 1—April 2003 - Tamil